உ

# சிவமுத்து மணி மாலை



தொகுப்பாசிரியர்:

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21-8-2009

உ

சிவமயம்



ஓம் ஸ்ரீ சித்திவிநாயகா நம

திருச்சிற்றம்பலம்

**துதி**

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று.

# சிவமுத்து மணிமாலை


## தொகுப்பாசிரியர்:
## புலவர் நாகமணி விநாயகமூர்த்தி

**15 - 06 - 2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# என்னுரை



பெரியோர்களே!

அனைத்து சக்திகளுக்கும் முதன்மையான சக்தி அன்னை ஆதி பராசக்தி. இந்த அன்னையாகிய சிவமுத்துமாரி அம்மனின் அற்புதங்களால் ஆட்கொள்ளப்பட்ட சித்த அடியார்கள் பலர் பிறந்தும் மறைந்தும் இம்மண்ணுலகத்தில் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

இத்தாய் எண்ணற்ற ஆண்டுகளுக்குமுன் சிவகடாட்சத்தால் கன்னனூர் உற்பவித்து கடல் கடந்த தேசமெல்லாம் தன் மெய்யடியார்களுக்கு நன்னருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். இச்சிவமுத்துமாரியம்மன் நம் ஈழவள மலைநாடு வடகிழக்கிலங்கையில் பலகிராமங்களிலும் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். இவ்வம்மையோடு காத்தவசுவாமி மேடையும் கோயிலுமாக ஆண்டுக்கொரு முறை திருவிழாப் பூசைகளும் காத்தவசுவாமி தவநிலையும் கடற்குளிப்பும் தீ மிதிப்புடன் சடங்கு நிறைவு பெறுகின்றன.

அன்பர்களே! இப்பூசைகளில் அம்மன் உச்சாடனம், தாலாட்டு அருள்பாடல், கும்மி என்பனவைகள் பாடி அம்மனை மகிழ்விப்பதும் உண்டு. இவ்விதம் காத்தவசுவாமிக்கும் நடைபெறும். இப்பாடல்கள் பூசகர் வாயிலாக பாடப்பட்டு வந்ததை மற்றோரும் நம் இளைய தலைமுறையினரும் படித்துப் பயன் அடைவார்கள் என்ற நம்பிக்கை கொண்டு இந்த மணிமுத்துக்களை கோர்த்துள்ளேன்.

அன்பர்களே! இறைபதமடைந்த எனது சிறிய தந்தை ஆ. கந்தையாப் பூசகர் அவர்களின் ஏட்டுப்பிரதிகளில் இருந்து காத்தவராயன் கும்மி உச்சாடனங்கள், சங்காரம் என்பனவும் அடியேனிடம் உண்டான தியானக்கும்மி அருள் பாடல்களும் திவ்விய கரணியிலிருந்து திரு நல்லையா சிவாயநம அவர்கள் தந்துதவிய தாலாட்டு வேறு கும்மியும் ஓந்தாச்சிமடம் கற்பகவிநாயகர் கோயிற் பிரதம குருவும், துறைநீலாவணை சிவமுத்துமாரியம்மன் கோயிற் பூசகருமாகிய சிவஸ்ரீ நல்லராசா குருக்கள் அவர்களிடமிருந்து காத்தவசுவாமி களுமரப்பாடலும், பொத்துவில் குண்டுமடு அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோயிற் பிரதம குரு க. கமலநாதன் அவர்களிடமிருந்து மாரியம்மன், காத்தவராயன் வசனநடைப் பாடல்கள் என்பனவைகளை ஒன்றாக்கி இத்தொகுப்புக்கு சிவமுத்துமணி மாலை எனத் திருநாமம் சூட்டியிருக்கிறேன்.

அடியார்களே! நம்பினோரைக் காத்தருள் நாயகியான இச்சிவமுத்துமாரி அம்மனின் கும்மி, தாலாட்டு, அருள்பாடல்களை தாங்களும் பயபக்தியுடன் பாடி அன்னை அருள் பெறுவீர்கள் என தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சக்தி பராபரி சங்கரி கல்யாணிதன்
சித்துடன் கும்மி தாலாட்டு சீருடன் பாடினோர் கேட்போர்
பத்திரப்படுத்தி இந்தமணி மாலை பூசித்தாலும்
சித்தியும் வாலை யுண்டாம் தேவிவந்தெதிர்நிற்பாளே

வணக்கம்

சேனைக்குடியிருப்பு.
15-06-2008

**தங்களின் அன்பன்,**
**ஈஸ்பரி மூர்த்தி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் தியானக் கும்மி

## துதி

**அன்னை பராசக்தி ஐம்பத்தோரட் சரத்தி
கன்னனூர் வீற்றிக்கும் கற்பகத்தி மின்னுபுகழ்
பஞ்சாட்சரத்தியிட பாடல் கும்மியான் பகர
குஞ்சரத்தோன் பாதம் குறி.**

## கும்மி

கார்முகில் கண்டு குயில் கூவும் திருக்
கன்ன புரநகரில் மேவும்
ஆயிரம் கண்முத்து மாரியில் மேல்ஞான
ஆதிமனோன் மணி பூரணி மேல் 1

சங்கம் முழங்கும் தமிழ்பாட வந்து
சத்தி விநாயகனைப் பாட
எங்களைக் காத்தருள் பூரணியே உல
எங்கும் நிறைந் திடும் நாரணியே 2

நற்றமிழ் ஞானக் கலைவாணி எந்தன்
நாவினில் தங்கும் சுரக்யாணி
வெற்றி வேற்க் கந்தன் உமைபாலன் சக்தி
வேலன் திருப்பதம் நாம் பணிவோம் 3

கத்துக் கடலில் வழியமைத்துப் பெரும்
களிப்புடையுடனே குதித்து
பத்துச் சிரசோன் தனைவதைத்துச் சென்ற
பச்சைமால் அச்சுதனைப் பணிவோம் 4

வாரி முடித்து மயிர்க்கோதி நல்ல
வண்ண மலர்சடை மீதிற் கட்டி
நாரிய ரெல்லோரும் வாருங்கடி சக்தி
நாரணி மேல் கும்மி பாடுங்கடி 5

முத்தெனும் பல்லினிற் காவியிட்டுச் சோதி
மோகன நெற்றியில் பொட்டு மிட்டு
சித்தனன் கண்டு தொழுதிடவே கண்
சிகப்பு நிறத்தில் சாயமிட்டு 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சும் சதங்கை பாதசரமும் தண்டை
கொலுசு காலாளி பீலியுடன்
மஞ்சள் முகத்தில் துலங்கிடவே நறு
மணம் கமழ்ந்திடும் மல்லிகைப்பூ 7

கும்ப கோணப் பட்டு சேலை கட்டி எழில்
கோ கர்ண சார்வில் றவிக்கை மாட்டி
அம்பிகை சக்தி அருள்மாரி ஆலையம்
ஆனந்தமாய் செல்வோம் தோழிப்பெண்ணே 8

ஆனந்த வல்லி அருட்சோதி மாரி
அங்கயர்க் கண்ணி அகலாம்பிகை
ஞானம் தரும் கலைவாணி துரந்தரி
நாரணியாம் முத்து மாரியம்மா 9

வானம் கடல்புவி ஈறாக உள்ள
வான்பொரு ளெல்லாம் படைத்த சக்தி
தானம் தவம் வாய்மை தன்னுள்ளே கொண்ட
தற்பரை ஆயிரம் கண்ணுடையாள் 10

கானக் குறமகள் காந்தாரி திருக்
கன்ன புரத்தில் வாழ் றீங்காரி
பாணனுக் கங்கம் கொடுத்தருள் வோனிடப்
பாகத் தமர் திடும் ஓங்காரி 11

கங்காளி சூலி காமாட்சி நெற்றிக்
கண்ணுத லோன் மகிழ் மீனாட்சி
சிங்க வாகனி திரிசூலி சக்தி
சிம்மய மானந்தி மாகாளி 12

அக்கணத்தி உயர் பொர்க்கணத்தி மாரி
அச்சுதன் தங்கை பராபரத்தி
முக்கணத்தி ஞான நிட்கணத்தி சோதி
முத்துமாரி யெனும் தர்ப்பரத்தி 13

ஏககரத்தி இருமணத்தி மக்கள்
ஏற்றும் இமயப் பரும்பரத்தி
நாகாதி பூண் சிங்கவாகனத்தி சதா
நம்பும் சிவசக்தி நாரணத்தி 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்ம சனத்தி பரும் தனத்தி ஈசன்
பக்கத் தமர்ந்திடும் பார்ப்பணத்தி
கற்பாம் கரத்தி கருநிறத்தி மாயன்
காகுந்தன் தங்கை கனகனத்தி 15

நம்பும் திருபுரை நாரணத்தி தினம்
நாடும் பக்தர்க் கருள் பூரணத்தி
ஆரணத்தி அருட் காரணத்தி இந்த
அண்டம் புகழும் பொன்னம் பலத்தி 16

மந்தாரை பிச்சி மலர் ரெடுத்து முத்து
மாமணிபோலே சரம்தொடுத்து
அந்தரிமா முத்து மாரியம்மன் மீது
அழகாய்ச் சாற்றுங்கள் தோழியரே 17

கண்ட மாலை சோகை வெப்புறுதி சூளைக்
காச்சல் இருமல் தலைவலியும்
தொண்டையுள் நாக்குப் புண் ஈளைவயிற்று நோ
தொற்று வியாதி கிறுகிறுப்பும் 18

மூலம் பௌத்திரம் முகப்பற்று சதா
மூச்சுச் திணறும் முடக்குவாதம்
காலக் கொடுமையும் கன்னபுரம்மாரி
காட்சி கண்டார்க் குண்டோ தோழியரே 19

அம்பிகை உன்னை அனுதினம் போற்றும் உன்
அன்பர்க்கு உற்ற வியாதி தன்னை
துன்பமில்லாமலே நீக்கியருள் தந்தாழ்
தூமணியே முத்து மாரியம்மா 20

பித்தம் மயக்கம் கிறுகிறுப்பு அருட்
பிஞ்சகியே என்னைத் தாக்கிடாமல்
சத்திய மாய் உன்மேல் ஆணைஇட்டுச் சொன்னேன்
சங்கரியே வந்து காத்தருளே 21

ஆணிமுத்தே அருட்காணிமுத்தே இந்த
அண்டம் புகழ் தவக்கேணி முத்தே
ராணிமுத்தே இளவேணி முத்தே தவ
ராசர் துதித்திடும் வாணிமுத்தே 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமுத்தே சோதி மின்னும் முத்தே அலை
வளர்சிப்பிக்குள் ஒளிஏறுமுத்தே
அன்னமுத்தே எழில் சொர்ண முத்தே திருக்
கன்ன புரம் வாழும் மாரிமுத்தே 23

ஈஎறும்பு முதல் எண்பத்தி நான்கு
இலட்சம் சீவர்கட்கும் முத்தெடுக்கும்
ஆயிமகமாயி ஆதிபரா சக்தி
அம்பிகையாம் எங்கள் மாரியம்மா 24

அந்தரி சக்தி அபிராமி வாலைக்
அங்கையிற் சூலி அகோர கௌரி
எந்தை பரமன் இடப்பாகம் தங்கிடும்
எக்கலா தேவி இரா ஜேஸ்வரி 25

வாலை புவன திரிபுர பைரவி
மாதங்கி கௌரி மகிடாம்பிகை
காளைவாகனன் மகிழ் குண்டலி சக்தி
கன்ன புரம் வாழும் மாரியம்மா 26

எல்லைப் பிடாரி எழில் துர்க்கை சாமுண்டி
எத்தலமும் புகழ் மாரிமுத்தே
தில்லையில் ஆனந்த நர்த்தன மிடும் ஞான
சித்தி யானந்த விளங்குமுத்தே 27

வாரணத்தி அருட்காரணத்தி அருள்
வாக்குக் கொடுத்திடும் பூரணத்தி
வீரணத்தி வித்தி யான நத்தி சதுர்
வேதம் துதித்திடும் வித்தகத்தி 28

மன்னுலக யாவர்க்கும் கன்னபுரம் முத்து
மாரியின் கும்மி மன மகிழ்ந்து
இன்னிலம் மீதினில் படித்தோரும் கேட்டோரும்
இன்பமுடன் வாழ்வார் இப்புவியில் 29

பொன்னகரமெனு மண்ணுலக மக்கள்
போற்றும் இராம நாதபுரம் நகர் சீர்
தென்னவன் நூர்பெரிய சாமியின் பாடலைத்
தேனெனப் பாடுங்கள் தோழியரே 30

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரியம்மன் உச்சாடனம்

ஓம்குங்கும மயோதரி சொல்லிட மாகாளி, என்னிரு கண்ணிற் குடிகொண்ட தெய்வமே, அஞ்செளுத் தான நீ, ஆறெளுத் துருவமாய், மா மாயனோடு டிருந்தவளும் நீ, ஆறுசாஸ் திரம் வேதகலைக் கியானம் நீ, ஐம்பத் தோர் அட்சரம் நீ, கஞ்சமரில் வாணனைக் கண்டதுண்டம் செய்த நீ, காரணி கலை பெறு வீரமாகாளி, கல்யாணி பொற்பாணி பஞ்சகோணத்தில் அனர்ந்தம் வளர்த்தவளும் நீ, பாவ தோஷங்கள் தீர்த்தவளும் நீ, எவ்வகையிலும் நுஞ்சிடாத நுத்திட்ட மாயோன் சகோதரி, வடிவுடைய சுந்தரி மதுரைமீனாட்சி, அய்யுங் கிலியுங், சவ்வும் கிறியும், ஐய்யும் பொருந்திய தேவகாரணி, ஆயீமகமாரி, கெங் கெங் கணபதி கௌவுரி புத்திராயா, திரியக்கரியத் திருக்காலில் திருச்சிலம்பு கலீர்க்கலீர் ரெனத்திருநடமிட்ட திபுர சுந்தரியாளே, மகமாரி ஒருகையில் திருசூலம் கொண்டு ஏறு ஏறு, பேசு பேசு. பேசம்மா பேசு என்தாயே பேசம்மா பேசு.

## மாரியம்மன் அருள் பாடல்

அம்மா அம்மா பெற்றவளே என் தாயே
என்தாயே முத்து மக மாரியம்மா
பேரரசி வாரு மம்மா 1

அம்மா அம்மா தாய் யல்ல வோ நீ எனக்கு
என்தாயே முத்து மக மாரியம்மா
சங்கரியே வாருமம்மா 2

அம்மா அம்மா மாதாவே நீ எனக்கு
என் தாயே முத்து மகமாரியம்மா
மன மகிழ்ந்து வாருமம்மா 3

அம்மா அம்மா உன் குருக்களளைக் கிறேனே
என் தாயே முத்துமகமாரியம்மா
என் குரல் கேட்டு வாருமம்மா 4

அம்மா அம்மா உன் மைந்தன் அளைக்கிறேனே
என்தாயே முத்து மக மாரியம்மா
உன்வண்ணமுகம் காணவென்று 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அம்மா உன் குழந்தை அழைக்கிறேனே
என்தாயே முத்து மகமாரியம்மா
குதித் தோடி வாருமம்மா 6

அம்மா அம்மா சிந்தனையை விட்டு மெல்லத்
என்தாயே முத்து மகமாரியம்மா
திரும்புமம்மா இந்த முகம் 7

அம்மா அம்மா நில்லாதே நில்லாதே
என்தாயே முத்து மகமாரியம்மா
நிறுத்தாதே பூ மரத்தை 8

அம்மா அம்மா வந்து வந்து போவ தெல்லாம்
என்தாயே முத்து மகமாரியம்மா
உன் வங்கிஷத்திற் கீனமம்மா 9

அம்மா அம்மா வெட்டித் திருப்புதம்மா
என்தாயே கும்பத்து மாரியம்மா
வீரசடை வீரகும்பம் 10

அம்மா அம்மா சுத்தித் திருப்பு தடி
என்தாயே கும்பத்து மகமாரியம்மா
சுழலுதடி பம்பரம்போம் 11

அம்மா அம்மா நிற்கத் தரிக்குதில்லை
என்தாயே கும்பத்து மாரியம்மா
நிலத்தில் கால் கொள்ளுதில்லை 12

அம்மா அம்மா வெட்டித் தடையறுத்து
என்தாயே கும்பத்து மாரியம்மா
விரைந்தோடி வாருமம்மா 13

அம்மா அம்மா நான் தேடி அழைக்கிறேனே
என்தாயே கும்பத்து மாரியம்மா
உன் திருமுகத்தை காணவென்று 14

அம்மா அம்மா நான் கூவியழைக்கிறேனே
என்தாயே கும்பத்து மாரியம்மா
குதித் தோடி வா ருமம்மா 15

அம்மா அம்மா ஆய் என்ற சத்தமுடன்
என்தாயே கும்பத்து மாரியம்மா
அரண்டோடி வாதாயே 16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உன் பவளப் பெட்டி வாய் திறந்து
என்தாயே கும்பத்து மகமாரியம்மா
ஒரு பஞ்சாங்கம் சொல்வேனம்மா 17

அம்மா அம்மா வாக்கிட்டால் தப்பாது
என்தாயே சிவமுத்து மாரியம்மா
வரம் கொடுத்தால் பொய்யாது 18

அம்மா அம்மா பொய்யா தவாசகியே
என் தாயே சிவமுத்து மாரியம்மா
நீ புறப்பட்டு வாருமம்மா 19

அம்மா அம்மா பொய்யாது பொய்யாது
என் தாயே கும்பத்து மாரியம்மா
பூமலர் தான் பொய்யாது 20

அம்மா அம்மா பூவிரண்டு பூத்தாலும்
என்தாயே கும்பத்து மாரியம்மா
உன் நாவிரண்டு பூக்காது 21

அம்மா அம்மா மஞ்சள் மணக்குதம்மா
என்தாயே முத்துமகமாரியம்மா
மருக்கொளுந்து வீசுதம்மா 22

அம்மா அம்மா மஞ்சள் கிணறு முண்டு
என்தாயே முத்து மகமாரியம்மா
மாமாங்கப் பொய்கையுண்டு 23

அம்மா அம்மா குங்குமவாடையம்மா
என்தாயே கும்பத்து மாரியம்மா
குளிர்வாடை வீசுதம்மா 24

அம்மா அம்மா ஆற்றுமணலெடுத்து
என்தாயே முத்து மகமாரியம்மா
அரனாரைப் பூசைபண்ணாய் 25

அம்மா அம்மா பூசைநல்ல பூசையம்மா
என் தாயே சிவமுத்து மாரியம்மா
புனர் பூசை யாகு தம்மா 26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருளாட்டப் பாடல்

**தரு**

அம்மா தந்தனத்தோம் தானேமம்மா தாயாரே அம்மா
அம்மா தானினத்தோம் தானேமம்மா மாதாவே அம்மா

**பாடல்**

அம்மா வாறாவாம் வாறாவாம் தாயாரே அம்மா
அம்மா மக்களுக்கு வரம் கொடுக்க மாதாவே அம்மா 1

அம்மா தாறாவும் புள்ளினமும் மாதாவே அம்மா
தாயே தவளுதடி பொய்கையிலே தாயாரே அம்மா 2

அம்மா பத்தினியே என்தாயே தாயாரே அம்மா
தாயே பார்வதியே வாருமம்மா மாதவே அம்மா 3

அம்மா வந்த மனை வாழுமம்மா தாயாரே அம்மா
தாயார் இருந்த மனை யீடேறும் மாதாவே அம்மா 4

அம்மா இந்த மனையிடத்து தாயாரே அம்மா
தாயே இருந்தேனென்று சொல்லாதே மாதாவே அம்மா 5

அம்மா எங்கள் குலத் தெய்வ மம்மா தாயாரே
தாயே ஈஸ்பரியே வாருமம்மா மாதாவே அம்மா 6

அம்மா திங்கள் வதனியரே தாயாரே அம்மா
தாயே திரும்புமம்மா இந்த முகம் மாதாவே அம்மா 7

அம்மா செஞ்சிலம்பு ஓசையிடத் தாயாரே அம்மா
தாயார் திருநடனமிட்டவளாம் மாதாவே அம்மா 8

அம்மா நடுக்கல் கிளதம்பு தம்மா தாயாரே அம்மா
தாயே நாகசினம் கொள்ளுதடி மாதாவே அம்மா 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா திருநடனக் காறியடி தாயாரே அம்மா
தாயே செய்ய கன்னனூராளே மாதாவே அம்மா 10

அம்மா மண்டியிடும் கால்களுக்கு தாயாரே அம்மா
தாயே மாதுளம்பூச் சல்லடமாம் மாதாவே அம்மா 11

அம்மா தூக்கிவைக்கும் கால்களுக்கு தாயாரே அம்மா
தாயார் துளசிப்பூச் சல்லடமாம் மாதாவே அம்மா 12

அம்மா ஆட்டம் நடையுடனே தாயாரே அம்மா
தாயே ஆடிவர வேணுமம்மா மாதாவே அம்மா 13

அம்மா வேப்பிலையும் கைபிடித்துத் தாயாரே அம்மா
தாயே வீசி விளையாடிவர மாதாவே அம்மா 14

அம்மா வாய்க் குற்றம் கைக் குற்றம் தாயாரே அம்மா
தாயே வன் குற்றம் நீ பொறுப்பாய் மாதாவே அம்மா 15

அம்மா குற்றம் பொறுத்து அம்மா தாயாரே அம்மா
தாயே கொண்டு மனம் பொறுக்குதம்மா மாதாவே அம்மா 16

அம்மா மாதா மனம் பொறுத்துத் தாயாரே அம்மா
தாயே மனமகிழ்ச்சியாகவேணும் மாதாவே அம்மா 17

அம்மா ஏது பிளை செய்தாலும் தாயாரே அம்மா
என்தாயே நீபொறுப்பாய் மாதாவே அம்மா 18

உமையவளே உன்பாதம் போற்றினோமம்மா தாயே
உன்னைச் சரணடைந்தோம் மாதாவே அம்மா 19

பத்தினியே உன் தாழ் சரணம் தாயாரே அம்மா
பார்பதிஉன் தாழ் சரணம் சரணமே அம்மா 20

சரணம் இரு தாழ் போற்றி போற்றி போற்றினேனம்மா
என் தாயே இருகரம் குவித்துப் போற்றினேனம்மா 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவமுத்துமாரியம்மன் தாலாட்டு

வாறாவாம் வாறாவாம் சிவமுத்து மாரி தாயார்
மக்களுக்கு வரங்கொடுக்கச் சிவமுத்துமாரி அம்மாளே

தாயாவோ நீயெனக்குச் சிவமுத்து மாரி தாயார்
தலைமகண்டி நானுனக்குச் சிவமுத்துமாரி அம்மாளே

உந்தன் பாலன் படுந்துயரம் சிவமுத்துமாரி தாயார்
பார்பதியே பார்க்கலையோ சிவமுத்துமாரி அம்மாளே

உந்தன் குழந்தை படுந்துயரம் சிவமுத்து மாரி தாயார்
கோயிலிக்குக் கேட்கலையோ சிவமுத்து மாரி அம்மாளே

உன் மக்கள் படும் துயரம் சிவமுத்துமாரி தாயார்
உன் மாளிகைக்குக் கேட்கலையோ சிவமுத்துமாரி

குருக்கள் படுந்துயரம் சிவமுத்து மாரி தாயார் எங்கள்
கொம்பனையே கேட்கலையோ சிவமுத்து மாரி அம்மாளே

ஆசான் படுந்துயரம் சிவமுத்து மாரி எங்கள்
அம்பிகையே பார்க்கலையோ சிவமுத்து மாரி அம்மாளே

தாங்கத் தரிக்குதில்லை சிவமுத்து மாரி எங்கள்
தாயாரே வாருமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

நிற்கத் தரிக்குதில்லை சிவமுத்து மாரி தாயார்
நிலத்தில்கால் தோணுதில்லை சிவமுத்து மாரி அம்மாளே

பத்தாத பத்தினியாஞ் சிவமுத்து மாரி தாயார்
வழிவாங்கு முத்தமியாம் சிவமுத்து மாரி அம்மாளே

தீராத நோய்பிணியைச் சிவமுத்து மாரி தாயார்
தீர்த்துவிட வேணுமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

மாறாத நோய்பிணியைச் சிவமுத்து மாரி தாயார்
மாற்றிவிட வேணுமம்மா சிவமுத்து மாரி அம்மாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபித்த கண்ணைவிட்டுச் சிவமுத்து மாரி தாயார்
குளிர்ந்த கண்ணால் பார்த்தாயே சிவமுத்து மாரி அம்மாளே

அக்கினிக் கண்ணைவிட்டுச் சிவமுத்து மாரி தாயார்
அமர்ந்த கண்ணால் பார்த்தாயே சிவமுத்து மாரி அம்மாளே

கும்பத் தழகியல்லோ சிவமுத்து மாரி தாயார்
கோபாலன் தங்கையல்லோ சிவமுத்து மாரி அம்மாளே

வேப்பிலையைக் கைப்பிடித்துச் சிவமுத்து மாரி தாயார்
வினையறுக்க வேணுமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

பத்திரங்கள் போனவிடஞ் சிவமுத்து மாரி தாயார்
பழுதொன்றும் வாராது சிவமுத்து மாரி அம்மாளே

ஆயிரங் கண்ணுடையாள் சிவமுத்து மாரி தாயார்
அரிராமர் தங்கையல்லோ சிவமுத்து மாரி அம்மாளே

நெருப்பிற் பிறந்தவளாஞ் சிவமுத்து மாரி தாயார்
நீலவர்ணன் தங்கையல்லோ சிவமுத்து மாரி அம்மாளே

அரனுடனே வாதாடிச் சிவமுத்து மாரி தாயார்
அரியமுத்துத் தானெடுத்தாய் சிவமுத்து மாரி அம்மாளே

சிவனுடனே வாதாடும் சிவமுத்துமாரி தாயார்
செய்யகன்னனூராளே சிவமுத்து மாரி அம்மாளே

கடுகளவு நீறெடுத்துச் சிவமுத்து மாரி தாயார்
காசளவோ மந்திரிப்பாய் சிவமுத்து மாரி அம்மாளே

மண்ணளவு நீறெடுத்துச் சிவமுத்து மாரி தாயார்
மலையளவு மந்திரிப்பாய் சிவமுத்து மாரி அம்மாளே

சிவனை நினைந்தலவோ சிவமுத்து மாரி தாயார்
திருநீற்றால் கோட்டையிட்டாள் சிவமுத்து மாரி அம்மாளே

அறையிலே கும்பமம்மா சிவமுத்து மாரி தாயார்
அம்பலத்தில் வாணவித்தை சிவமுத்து மாரி அம்மாளே

வாணவித்தைக் காறியென்று சிவமுத்து மாரி தாயார்
வானோர்கள் சொல்லுகிறார் சிவமுத்து மாரி அம்மாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கத் தரிக்குதில்லை சிவமுத்து மாரி தாயார்
சற்குருவை நாடனம்மா சிவமுத்து மாரி அம்மாளே

ஓட்டம் நடையுடனே சிவமுத்து மாரி தாயார்
ஓடிவர வேணுமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

ஆட்டம் நடையுடனே சிவமுத்து மாரி தாயார்
ஆடிவர வேணுமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

நடுக்கல் கிளம்புதம்மா சிவமுத்து மாரி தாயார்
நாகசினங் கொள்ளுதடி சிவமுத்து மாரி அம்மாளே

கோபம் எழும்பாதோ சிவமுத்து மாரி தாயார்
கொள்ளிதண லாகாதோ சிவமுத்து மாரி அம்மாளே

பள்ளையக் காரியல்லோ சிவமுத்து மாரி தாயார்
பார்பதியே வாருமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

சிற்றுடுக்குக் கைப்பிடித்துச் சிவமுத்து மாரி தாயார்
சிவனாரைத் தோத்தரித்தாய் சிவமுத்து மாரி அம்மாளே

ஈஸ்வரனார் மேனியிலே சிவமுத்து மாரி தாயார்
இட்டெறிந்தாய் கனகமுத்தைச் சிவமுத்து மாரி அம்மாளே

நீயெறிந்த முத்துகளைச் சிவமுத்து மாரி
இப்போ தானிறக்க வேணுமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

வீசிவிளை யாடியல்லோ சிவமுத்து மாரி
முத்துவேண்டத் தவசிருந்தாய் சிவமுத்து மாரி அம்மாளே

மோட்டுவளை போலேயல்லோ சிவமுத்து மாரி தாயார்
முன்னூறாஞ் செங்கரும்பு சிவமுத்து மாரி அம்மாளே

வாழைப் பழங்கரும்பு சிவமுத்து மாரி தாயார்
மகராசி நான் தருவேன் சிவமுத்து மாரி அம்மாளே

மாரித்தாய் வல்லவியே சிவமுத்து மாரி தாயார்
வடிவான நாயகியே சிவமுத்து மாரி அம்மாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயே துரந்தரியே சிவமுத்து மாரி எங்கள்
சவுந்தரியே வாருமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

மாயன் சகோதரியே சிவமுத்து மாரி எங்கள்
மங்கையரே வாருமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

நீலவண்ணன் தங்கையரே சிவமுத்துமாரி
நித்தபரிபூரணியே சிவமுத்துமாரி அம்மாளே

ஆயன் சகோதரியே சிவமுத்து மாரி தாயார்
ஆஸ்தான நாயகியே சிவமுத்து மாரி அம்மாளே

மக்கள் அடிமையம்மா சிவமுத்து மாரி இந்த
மனையடிமை யூர்காவல் சிவமுத்து மாரி அம்மாளே

இந்த மனையோடே சிவமுத்து மாரி தாயார்
ஏழுமனை காவலம்மா சிவமுத்து மாரி அம்மாளே

ஆறுகுற்றம் நூறுபிழை சிவமுத்து மாரி தாயார்
அடியார்கள் செய்தபிழை சிவமுத்து மாரி அம்மாளே

தெரியாமற் செய்தபிழை சிவமுத்து மாரி எங்கள்
தேவியரே நீபொறம்மா சிவமுத்து மாரி அம்மாளே

அறியாமற் செய்தபிழை சிவமுத்து மாரி தாயார்
ஆச்சியரே நீபொறம்மா சிவமுத்து மாரி அம்மாளே

குற்றம் பொறுத்தருளுஞ் சிவமுத்து மாரி எங்கள்
கோபால் தங்கையரே சிவமுத்து மாரி அம்மாளே

நாரணனார் தங்கையல்லோ சிவமுத்து மாரி தாயார்
நற்பெரிய மாதாவே சிவமுத்து மாரி அம்மாளே

ஆரோ எவரோவென்று சிவமுத்து மாரி உன்னை
ஆராய்ந்து பார்க்கிறதும் சிவமுத்து மாரி அம்மாளே

வாக்கிட்டாற் பொய்யாது சிவமுத்து மாரி தாயார்
வரங்கொடுத்தால் தப்பாது சிவமுத்து மாரி அம்மாளே

பொய்சொல்லா வாசகத்தி சிவமுத்துமாரி தாயார்
புதுமைத் துரைமகளாம் சிவமுத்து மாரி அம்மாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பின மக்களுக்குச் சிவமுத்து மாரி தாயார்
நடுவவந்து கைதாரும் சிவமுத்து மாரி அம்மாளே

வண்ணத் துரைமகளாம் சிவமுத்து மாரி தாயார்
வழக்காடி வென்றசக்தி சிவமுத்து மாரி அம்மாளே

ஆலிலைமேற் பள்ளிகொள்ளும் சிவமுத்து மாரி தாயார்
அரிராமர் தங்கையல்லோ சிவமுத்து மாரி அம்மாளே

பார்க்கடலில் பள்ளி கொள்ளும் சிவமுத்துமாரி தாயார்
பரந்தாமன் தங்கையரே சிவமுத்துமாரி அம்மாளே

உடுகு பிறந்தம்மா சிவமுத்து மாரி தாயார்
உரத்திராட்ச மேடையிலே சிவமுத்து மாரி அம்மாளே

சிலம்பு கலகலெனச் சிவமுத்து மாரி தாயார்
செஞ்சிலம்பு ஓசையிடச் சிவமுத்து மாரி அம்மாளே

கரகம் பிறந்ததம்மா சிவமுத்து மாரி தாயார்
கன்னனூர் மேடையிலே சிவமுத்து மாரி அம்மாளே

ஐந்து கரகமம்மா சிவமுத்து மாரி தாயார்
அசைந்தாடும் பொற்கரகம் சிவமுத்து மாரி அம்மாளே

ஏழு கரகமம்மா சிவமுத்து மாரி தாயார்
எடுத்தாடும் பொற்கரமகம் சிவமுத்து மாரி அம்மாளே

துள்ளுமா வைப்போருஞ் சிவமுத்து மாரி தாயார்
துவரவிடாய் தீர்ப்போரும் சிவமுத்து மாரி அம்மாளே

இளநீர்தான் வைப்போரும் சிவமுத்து மாரி தாயார்
இகரவிடாய் தீர்ப்போரும் சிவமுத்து மாரி அம்மாளே

மதுவருந்தும் வேளையிலே சிவமுத்து மாரி தாயார் ஒரு
மானிடவர் கண்டதில்லை சிவமுத்து மாரி அம்மாளே

பெலியருந்தும் வேளையிலே சிவமுத்து மாரி தாயார்
பின்னிரக்கம் பார்ப்பதில்லை சிவமுத்து மாரி அம்மாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைக்கே கோடாலி சிவமுத்து மாரி தாயார்
மார்புக் கிரும்புலக்கை சிவமுத்து மாரி அம்மாளே

கரகத்திற் குள்ளிருந்து சிவமுத்து மாரி தாயார்
கண்காட்டிக் கூப்பிடம்மா சிவமுத்து மாரி அம்மாளே

பாப்பார வீதியெல்லாம் சிவமுத்து மாரி தாயார்
விளையாடப் பெண்பிறந்தாய் சிவமுத்து மாரி அம்மாளே

எக்கலா தேவியல்லோ சிவமுத்து மாரி எங்கள்
ஏந்திழையே வாதாயே சிவமுத்து மாரி அம்மாளே

திக்கெல்லாம் போற்றுகின்ற சிவமுத்துமாரி தாயார்
தேவியரே வாராயே சிவமுத்துமாரி அம்மாளே

மாத்துடுத்துத் தலைமுழுகி சிவமுத்து மாரி தாயார்
மஞ்சள் நீர் ஆடவென்று சிவமுத்து மாரி அம்மாளே

தீர்த்த மெடுத்தாவாம் சிவமுத்து மாரி தாயார்
தீவினையை மாற்றவென்று சிவமுத்து மாரி அம்மாளே

பூசைக்குப் போகவென்று சிவமுத்து மாரி தாயார்
புறப்பட்டு வாறாவாம் சிவமுத்து மாரி அம்மாளே

யாருடைய பூசையென்று சிவமுத்து மாரி தாயார்
அங்கே நின்று லாவுவதும் சிவமுத்து மாரி அம்மாளே

பூசைநல்ல பூசையம்மா சிவமுத்து மாரி தாயார்
புனர்பூசை யாகுதம்மா சிவமுத்து மாரி அம்மாளே

வேளைநல்ல வேளையம்மா சிவமுத்து மாரி தாயார்
விருந்துண்ணும் வேளையம்மா சிவமுத்து மாரி அம்மாளே

சாமம்நல்ல சாமமம்மா சிவமுத்து மாரி தாயார்
சதிராடுஞ் சாமமல்லோ சிவமுத்து மாரி அம்மாளே

ஓங்கார முக்கோணம் சிவமுத்து மாரி தாயார்
ஓம்நமசி வாயமென்று சிவமுத்து மாரி அம்மாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கார சக்திபெற்ற சிவமுத்து மாரி தாயார்
அரிராமர் தங்கையம்மா சிவமுத்து மாரி அம்மாளே

வெள்ளைமலர் தானெடுத்துச் சிவமுத்து மாரி தாயார்
விநாயகரைப் பூசைசெய்தாய் சிவமுத்து மாரி அம்மாளே

சிவந்தமலர் தானெடுத்துச் சிவமுத்து மாரி தாயார்
சிவனாரைப் பூசைசெய்வாய் சிவமுத்து மாரி அம்மாளே

காந்தமலர் தானெடுத்துச் சிவமுத்து மாரி தாயார்
கணபதியைப் பூசைசெய்வாய் சிவமுத்து மாரி அம்மாளே

அலர்ந்தமலர் தானெடுத்துச் சிவமுத்து மாரி தாயார்
அரிராமரைப் பூசைசெய்வாய் சிவமுத்து மாரி அம்மாளே

அலரி மலர்தானெடுத்துச் சிவமுத்துமாரி தாயார்
ஐங்கரனைப் பூசை செய்தாய் சிவமுத்து மாரி அம்மாளே

ஆலாத்தி தானெடுத்துச் சிவமுத்து மாரி தாயார்
அம்மனுக்கே கைகாட்டி சிவமுத்து மாரி அம்மாளே

கற்பூர வாடையல்லோ சிவமுத்து மாரி தாயார்
கனவாடை வீசுதம்மா சிவமுத்து மாரி அம்மாளே

சாம்பிராணி வாடையல்லோ சிவமுத்து மாரி தாயார்
தனிவாடை வீசுதம்மா சிவமுத்து மாரி அம்மாளே

பண்டாரம் தானெடுத்துச் சிவமுத்து மாரி தாயார்
பரமனையோ பூசைசெய்வாய் சிவமுத்து மாரி அம்மாளே

ஆதிசிவன் தன்னருளால் சிவமுத்து மாரி தாயார்
பூலோகத் தேயுதித்தாய் சிவமுத்து மாரி அம்மாளே

மக்கள் படுந்துயரம் சிவமுத்து மாரி தாயார்
மாதாவே பாருமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

பாலன் படுந்துயரம் சிவமுத்து மாரி தாயார்
பார்பதியே பார்க்கலையோ சிவமுத்து மாரி அம்மாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை படுந்துயரம் சிவமுத்து மாரி தாயார்
எங்கள் ஏந்திழையே பாருமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

சேலைநல்ல சேலையம்மா சிவமுத்து மாரி தாயார்
தென்னம்பூச் சேலையம்மா சிவமுத்து மாரி அம்மாளே

ஆய்யென்ற சத்தமுடன் சிவமுத்து மாரி தாயார்
ஆடிவர வேணுமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

கூவென்ற சத்தமுடன் சிவமுத்து மாரி தாயார்
கொக்கரித்து வாதாயே சிவமுத்து மாரி அம்மாளே

ஓடாதே ஒளியாதே சிவமுத்து மாரி தாயார்
ஓய்ந்திருக்க லாகாது சிவமுத்து மாரி அம்மாளே

பத்திது பத்திதென்று சிவமுத்து மாரி தாயார்
பசுந்தணலை மூட்டாதே சிவமுத்து மாரி அம்மாளே

எரியுது தெரியுதென்று சிவமுத்து மாரி தாயார்
எரிதணலை மூட்டாதே சிவமுத்து மாரி அம்மாளே

நெருப்பில் பிறந்தவளாம் சிவமுத்து மாரி தாயார்
நீவர்ணன் தங்கையம்மா சிவமுத்து மாரி அம்மாளே

அக்கினியிற் பெண்பிறந்தாய் சிவமுத்து மாரி தாயார்
அரிராமர் தங்கையம்மா சிவமுத்து மாரி அம்மாளே

மங்கையர்க் கரசியம்மா சிவமுத்து மாரி தாயார்
மான்மழு தரித்தவளே சிவமுத்து மாரி அம்மாளே

அக்காளும் தங்காளும் சிவமுத்து மாரி தாயார்
அஞ்சிரண்டு ஏழ்பேரும் சிவமுத்து மாரி அம்மாளே

ஏழ்பேர்க் கிளையவளாஞ் சிவமுத்து மாரி எங்கள்
ஏந்திழையே வாருமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

பத்தாத பத்தினியே சிவமுத்து மாரி எங்கள்
பார்பதியே வாருமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினிக் கண்ணை விட்டுச் சிவமுத்து மாரி தாயார்
அமர்ந்த கண்ணால் பாருமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

கோபித்த கண்ணைவிட்டுச் சிவமுத்து மாரி தாயார்
குழிர்ந்தகண்ணால் பார்த்தாயே சிவமுத்து மாரி அம்மாளே

கார்தாயே கார்தாயே சிவமுத்து மாரி இந்த
மக்களையுங் கார்தாயே சிவமுத்து மாரி அம்மாளே

கும்பத்திற் குள்ளிருந்து சிவமுத்து மாரி தாயார்
குளிர்ந்தருள வேண்டுமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

கரகத்து மீதிருந்து சிவமுத்து மாரி எம்மைக்
காத்தருள வேணுமம்மா சிவமுத்து மாரி அம்மாளே

ஆறுகுற்றம் நூறுபிழை சிவமுத்து மாரி தாயார்
அன்புடனே நீபொறம்மா சிவமுத்து மாரி அம்மாளே

கோடி குற்றம் கோடி பிழை சிவமுத்துமாரி எங்கள்
கொம்பனையே நீ பொறுப்பாய் சிவமுத்துமாரி அம்மாளே

ஆண்டுக் கொருபயணம் சிவமுத்து மாரி தாயார்
அன்பான பூசையிது சிவமுத்து மாரி அம்மாளே

உ
திருச்சிற்றம்பலம்

## காத்தவசுவாமி உச்சாடனம்

ஓம் சந்தணம், குங்குமம் கஸ்தூரி குமுகுமு மென்றே மணக்கும். குலாவிவரும் சூரியப் பிரகாச மேனியும். கெண்டை தனிலே வீர கிங்கிணியாட. பகவசத்திலே வாளெடுத்து எங்கும் ஒரு பூத வேதாளங்கள் ஆட. இரண பத்திர காளியாட. பொங்கு தண்டிகையான கனக தண்டி கைமுழங்க. பூலோகமெங்கும் காத்தவராசன் பவனிக் கெளிதாகுமோ. அண்டம் கிடுகிடுடென. ஆகாசம் தான் முழங்க. பூமிகிடுகிடுன. பூலோகம் தானடுங்க. காத்தவனை ஈன்றவர்க்கு. முருங்கு கஸ்தூரி காமுருகம் நன்னாடாம். ஆள்வாம் படித்துறையாம். அல்ல ரங்கம் பாளையமாம். எங்களுக்கு அண்ணன் அவர். பெண்களுக்கு மணவாளனப்பா தாய்க்குத் தலைமகனாம். சண்முகர்க்கு மூத்த பிள்ளை. குடிக்கிறது சாராயம் கொப்பளிப்பான் வெள்ளரக்கு. அரக்கு வெறியனப்பா ஆணழகன் மாரிமகன். மாரிமகன் அல்லோ சுவாமி துரை பஞ்சவர்ணம். நீ மாறா மணிவிளக்கே உன்பாதம் சரணம் சரணம் சுவாமியே சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# காத்தவராயன் கும்மி

### காப்பு

**அத்தி மலர் அணிஉமை திருவருளால்**
**காத்தவனார் கும்மிதனைக் கழறுதற்கு போற்றும்**
**விக்கின விநாயகனே வேலவர்க்கு மூத்தவனே**
**அக்கரையாய் அடியேனையாள்**

### கும்மி

கும்மியடி பெண்காள் கும்மியடி - உங்கள்
கூந்தல் அசையாமல் கும்மியடி
நம்மை யாளும் காத்த சுவாமியை
நாடிக் கும்மி அடியுங்கடி அவரைத்
தேடிக் கும்மியடியுங்கடி

அரனெனச் செல்லும் சூளையிலே அவர்
அழகனென்றுமே மண்டியிலே
பிரசன்ன விநாயகர் தன்னருளால் இப்போ
பெருமையாய்க் கும்மி பாடலுற்றேன் - சுவாமி
அருமையாய்க் கும்மி பாடலுற்றேன் கும்மியடி

நந்தவனம் தனைக் காத்தவண்டி - அவர்
நான்கு பெண்களைப் பார்த்த வண்டி
அந்த முடன் சிவன் புத்திரன் காத்தானை
ஆசித்து நேசித் தடியுங்கடி - அவரை
பூசித்து வாசித் தடியுங்கடி கும்மியடி

ஆரிய மாலையில் ஆசை கொண்டார் - அவர்
அம்பிகை காமாட்சி தன்னைக் கண்டார்
காரியமான வரங்கள் பெற்று - இதோ
காத்தவன் வாறதைப் பாருங்கடி - நமக்
கேற்றவன் வாறதைப் காணுங்கடி கும்மியடி

தொட்டியத்துச் சின்னான் தன்னைக் கண்டு - அவர்
தோழமையாகவே வைத்துக் கொண்டு
அட்டிலாமலே அடர்ந்த காட்டிலே
அய்யன் வாறதைப் பாருங்கடி நமது
மெய்யன் வாறததைக் கேளுங்கடி கும்மியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பச் சுரக்காயை தானெடுத்து - அவர்
கடைந்த கிண்ண ரியாய்ப் பிடித்தே
அப்பாபட்டர் நகரத் தருகில் மேளம்
அடித்தான் கிண்ணரி கேளுங்கடி - கையில்
பிடித்தான் கிங்கிணி மீளுங்கடி கும்மியடி

வண்ணார நெல்லி மனையைக் கண்டு - சுவாமி
விண்ணாரம் பேசி உறவு கொண்டு
எண்ணமுடன் அந்த வண்ணார் வுயிர்களை
எட்டி அடித்ததைப் பாருங்கடி சுவாமி
கட்டி முடித்ததைக் கேளுங்கடி கும்மியடி

சாராயப் பூதியை நாடியங்கே - அவர்
பூசாரம் பேசியுறவாடி
சாராயப் பீப்பாமுளுதும் உண்டு - ஊரைத்
தாண்டி வாரார் இதோ பாருங்கடி தாயை
வேண்டி வாறார்ரிங்கே கேளுங்கடி கும்மியடி

கிள்ளையைப் போலே வடிகொண்டு - சுவாமி
வெள்ளை எனும் தாதி தின்னக் கண்டு
மெல்லியர் மனையினில் உள்ளே நுழைந்தவர்
மெள்ளவே ஓடினார் பாருங்கடி - அவர்
செவ்வையாய்ப் பாடினார் கேளுங்கடி கும்மியடி

வளையல் கொத்தை அவர்ரெடுத்து - சுவாமி
மாலையவள் கையில் தான்கொடுத்து
களையுண்டாக்கியே கன்னி கழுத்தினில்
கட்டிவிட்டான் தாலிபாருங் கடி - மேளம்
கொட்டி வந்தார் ரொலி கேளுங்கடி கும்மியடி

அப்பா சுவாமி வடிவு கொண்டு - ஐயன்
ஆயிரம் வேதியர் தன்னைக் கண்டு
அப்பா பட்டர் மனையிற் பறையரையவர்
அடிக்கச் செய்ததைப் பாருங்கடி - மனம்
துடிக்க வைத்ததைப் கேளுங்கடி கும்மியடி

ஆசாரம் குலைந்த தென்றே அவர்
அலைந்து கொண்டு வரும்போது
பாசாங்கான குருக்கள் வடிவுடன்
பற்றி அழைத்தாரே வேதியரை - சுவாமி
ஏற்றிக் கொடுத்தாரே சாதிகளை கும்மியடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியமாலையைக் கொண்டுவந்து - மங்கே
அழகுடன் நகையே பொருத்தி
வீரியமாகவே அங்கு வைத்து சுவாமி
வேடிக்கை பார்த்ததைப் பாருங்கடி மணச்
சோடிப்பதாய் வாறார் கேளுங்கடி கும்மியடி

பஞ்சி கொள்ளும் செட்டிபோலே வந்து - அவர்
பாவையர் மேலே மனமுவந்து
பஞ்சுப் பொதியுடன் வஞ்சனை யில்லாமல்
பார்த்திருந்து வந்தான் பாருங்கடி - சுவாமி
சேர்ந்திருந்து வந்தார் கேளுங்கடி கும்மியடி

மாயன் மகளுடன் வாதாடி அவர்
மனமுவந்திடச் சூதாடி
ஆயன் குமாரியின் வித்தை எல்லாம் இவர்
அடக்கி வைத்ததைப் பாருங்கடி சுவாமி
முடிக்கி தந்ததைக் கேளுங்கடி கும்மியடி

அன்னமுத்து மேல் ஆசை கொண்டு - சுவாமி
வண்ணமுத்து இட்ட மாளிகையில்
கன்னம் வைத்து நடுமோட்டைதுளை செய்து
கன்னிதனைக் கொண்டு வந்தாண்டி - இவர்
என்னவிதமாக வந்தாண்டி கும்மியடி

பூவுல கெங்கும் புகழ் படைத்த மாரி
புத்திரனார் கும்மி சீர் பாடுதற்கு
உச்சிதமானதோர் சப்த கன்னியர்க்கு
உற்றவராம் எங்கள் காத்தவனார் அவர்
மற்றவர்க் கண்ணராம் பாருங்கடி கும்மியடி

உறுண்ட கட்டினில் மேலிருந்து காத்தான்
உல்லாச நித்திரை போறாராம்
அரட்டு நித்திரை போகையிலே அவரை
எழுப்பி கும்மி கொண்டாடுங்கடி தினம்
குதித்து கும்மியடியுங்கடி கும்மியடி

சோழ நற் தேசமும் சுற்றிக் கொண்டான் காத்தான்
தொட்டியத்துச் சின்னானைச் சேர்த்துக் கொண்டான்
காளை எனும் அழகான வடிவுடை எங்கள்
கட்டழகன் வாறார் பாருங்கடி அவரை
கருதிக் கும்மிகொண்டாடுங்கடி. கும்மியடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கண னாரிட்ட சாபத்தினாலவர்
மூன்று கன்னியர் கோபத்தினால்
சக்கரம் போலே பெருத்த களவினில்
தயங்காமலேறினார் பாருங்கடி பின்
வாங்காமல் ஏறினார் கேளுங்கடி கும்மியடி

சத்த கன்னி தவமிருந்து சுவாமி
சுத்த மனத்துடன் னேயெழுந்து
சித்தமுடன் காளி தன்னைக் கண்டு அவள்
சீரருள் பெற்றதைப் பாருங்கடி அம்மன்
பேரருள் பெற்றதைக் கேளுங்கடி கும்மியடி

வந்த சனங்களெல்லாம் போற்றத் தேவ
இந்திரர்ரிங்கு மலர் தூவ
சுந்தரமான களுமரம் தன்னிலே
சொல்ல முடியா வருத்தம் கொண்டார் - சுவாமி
மெல்லியர் மேலே பொருத்தம் கொண்டார் கும்மியடி

அரசனும் கண்டுஇறங்குமெனச் சொல்ல
அய்யனும் தேவி களும்மிறங்கி
திறமுடனே சிவன் உரைத்த வாய்ச் சொற்படி
திருச்சிராப் பள்ளி சேர்ந்திருந்தார் - இரு
தெரிவை மாதரைச் சேர்ந்திருந்தார். கும்மியடி

சுபம்

காத்தவராயன் கும்மி முற்றிற்று.

**வேறு**

1. கந்தனை யீன்ற மகமாரி நல்ல
கண்ணுள்ள பத்தினித் தாயா ரே
செந்தமிழ்க் கும்மி பாட நல்ல
சித்தி விநாயகன் காப்பா மே

2. வெள்ளிக் கிழமை யுதயத் திலே
விளங்குஞ் சந்நிதி வாசலிலே
வள்ளிக் கிசைந்த வடிவேலர் மண
வாளர் வாறார் கும்மியடி.

3. எங்கேகண் டாய்பெண்ணே யெங்கேகண் டாய்
எங்கள் குமாரனை யெங்கே கண்டாய்
தெற்குத் தெருவிலே தேரோடும் வீதியில்
செல்வக் குமாரனைக் கண்டே னம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மாலை யென்னை மயக்கு தம்மா
மாம்பழ மென்னைப் பகட்டு தம்மா
நம்மை யாளுங் காத்தவ சாமியை
நாடிக் கும்மிகொண் டாடுங்கடி.

5. மஞ்ச ளரைக்கிற வாழ்மயி லேமர
மஞ்சள் மணக்குது வுன்மே லே
கன்னத்தில் புள்ளுங் கீழ்க் கொய்யகமுங் என்
கண்ணை மறைக்குது ஞானப் பெண்ணே.

6. கறிக்கு மஞ்சள ரைக்கை யிலே
கண்டா னேகடைக் கண்ணா லே
இழத்த ரைக்கவுங் கூடுதில்லையவன்
என்ன என்ன மாயமோ செய்தான் டி.

உ
திருச்சிற்றம்பலம்

## காத்தவராயன் தாலாட்டு

1. அரிஓம் நமசி வாயநம ஆதி காத்தமுனி
ஆனந்த நமசி வாயநம.
2. குருவே நமசி வாயநம ஆதி காத்தமுனி
குருலிங்க நமசி வாயநம
3. சிவனே நமசி வாயநம ஆதி காத்தமுனி
சிவலிங்க நமசி வாயநம
4. சிவனை வணங்கி வந்தாய் ஆதி காத்தமுனி
சிவபூசை பண்ணி வந்தாய்
5. குருவை வணங்கி வந்தாய் ஆதி காத்தமுனி
குருபூசை பண்ணி வந்தாய்.
6. மஞ்சட் கிணற்றிலையும் ஆதி காத்தமுனி
மாமாங்க மாடி வந்தாய்
7. இஞ்சிக் கிணற்றிலையும் ஆதி காத்தமுனி
இளநீர் முழுகி வந்தாய்.
8. நல்லெண்ணெய் தானெடுத்து ஆதி காத்தமுனி
நலங்கிட்டாய் கூந்தலுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சீவியே சிக்கெடுத்து ஆதி காத்தமுனி
சித்திராய்க் கொண்டை கட்டி

10. இட்டாய் திருநீறு ஆதி காத்தமுனி
எங்கும் பளபளென

11. இட்டாய் ஒரு திலகம் ஆதி காத்தமுனி
ஏழிலங்கை சோதி மின்ன

12. சோம னெடுத்துடுத்து ஆதி காத்தமுனி
சொருகு தொங்கல் தூங்க விட்டாய்

13. சரிகை பளபளென ஆதி காத்தமுனி
சந்திர காவி நின்றிலங்க

14. தோகைகறுப் பாகியினால் ஆதி காத்தமுனி
தொட்டியனை வெற்றி கொண்டாய்

15. வல்லபெருங் கத்தியொடு ஆதி காத்தமுனி
வல்ல யத்தைக் கைப்பிடித்தாய்.

16. பதினெட்டு ஆயுதமும் ஆதி காத்தமுனி
படைக்கலமுந் தானெடுத் தாய்.

17. கண்ணுக்கு மையெழுதி ஆதி காத்தமுனி
கணையாளி தான் தரித்தாய்.

18. காறை பளபளென ஆதி காத்தமுனி
கண்ட சரம் நின்றிலங்க

19. தூரத்தே போறவர்க்கு ஆதி காத்தமுனி
சுண்டி வில்லுக் கைப்பிடித்தாய்

20. அம்மை யிடம்போய் ஆதி காத்தமுனி
அடி வாங்கித் தெண்டனிட்டு

21. சரணஞ் சரணமென்று ஆதி காத்தமுனி
சாய்த்தாய் திருமுடியை

22. வெள்ளிமலைக் கப்புறத்தே ஆதி காத்தமுனி
அள்ளி வந்த திருநீறு

23. அம்மை தந்தநீறு ஆதி காத்தமுனி
அணியப் பிறந்தவனோ

24. அணிந்த திருநீறு ஆதி காத்தமுனி
அண்டரந் தான்மதிக்கும்

25. அம்மை தந்த மாலை ஆதி காத்தமுனி
அழகான மார் பிலங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பூசைக்குப்போகவென்று ஆதி காத்தமுனி
புறப்பட்டு வாறாராம்
27. தீராத நோய்பிணியை ஆதி காத்தமுனி
தீர்த்துவிட வேணுமையா
28. மாறாத நோய்பிணிணை ஆதி காத்தமுனி
மாற்றிவிட வேணுமையா
29. கடுகளவு நீறெடுத்த ஆதி காத்தமுனி
காசளவு மந்திரிப்பாய்
30. மண்ணளவு நீறெடுத்து ஆதி காத்தமுனி
மலையளவு வட்டமிட்டாய்
31. வேப்பிலையைக் கைப்பிடித்து ஆதி காத்தமுனி
வினையறுக்க வேணுமையா
32. தீர்த்த மெடுத்தாராம் ஆதி காத்தமுனி
தீவினையை மாற்றவென்று
33. வெள்ளை மலரெடுத்து ஆதி காத்தமுனி
வினாயகரைப் பூசை செய்வாய்
34. சிவந்த மலரெடுத்து ஆதி காத்தமுனி
சிவனாரைப் பூசை செய்வாய்
35. காந்தள் மலர்தானெடுத்து ஆதி காத்தமுனி
கணபதியைப் பூசைசெய்வாய்
36. அலர்ந்த மலர்தானெடுத்து ஆதி காத்தமுனி
அரிராமரைப் பூசைசெய்வாய்
37. ஆலாத்தி தானெடுத்து ஆதி காத்தமுனி
அம்மனுக்கே கைகாட்டி
38. ஆலாத்தி தாளெடுத்து ஆதி காத்தமுனி
அரண்பூசை தான் முடிப்பாய்
39. ஆழிக் கரையில் ஆதி காத்தமுனி
அரும் புஷ்பம் தானெடுத்து
40. அம்மன் திருவடியில் ஆதி காத்தமுனி
அரும் பூசை செய்கையிலே
41. ஆச்சி மனமிரங்கி ஆதி காத்தமுனி
அருள் புரிந்தா ளன்பாக
42. வாக்குத் திறந்து அம்மன் ஆதி காத்தமுனி
வரங்கொடுத்தாள் காமாட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. கெங்கை யரட்டியல்லோ ஆதி காத்தமுனி
கெறுவிதமாயப் பூசை பண்ணி
44. திருநீற்றுக் காப்பணிந்து ஆதி காத்தமுனி
சிவபூசை பண்ணையிலே
45. சந்தணப்பொட்டுமிட்டு ஆதி காத்தமுனி
தாளிற் சதங்கை கொஞ்ச
46. என்னுடைய சத்துருவை ஆதி காத்தமுனி
எரித்துவிட வேணுமையா
47. துட்டப் பசாசுகளை ஆதி காத்தமுனி
துரத்திப் பிடியனப்பா
48. எச்சிப் பசாசுகளை ஆதி காத்தமுனி
எட்டத் துரத்தனப்பா
49. திருநீறு தானெடுத்து ஆதி காத்தமுனி
தீவினையை மாற்றுமப்பா.

. சுபம்

உ
திருச்சிற்றம்பலம்

## வீரபத்திரன் சங்காரம்

ஓம் சிறியும் மிறியும். அரகரவீரபத்திரா சங்நரி சங்நரி. அரிஅரி வீரபத்திரா. சங்நரி சங்நரி. சரவண வீரபத்திரா சங்நரி சங்நரி. சயனொளி வீரபத்திரா சங்நரி. சங்நரி. பரிபுர வீரபத்திரா சங்நரி. சங்நரி பவனொளி வீரபத்திரா சங்நரி சங்நரி. என்மேல் எதிர்த்த சத்திராதிகளைச் சங்நரி சங்நரி. சர்வபூதப்பிரேதப்பசாசிகளையும் சங்நரி சங்நரி. சர்வதேவதைகளையும் சங்நரி சங்நரி. ஆதிவீரபத்திராயா அறுஅறு. அனாதி வீரபத்திராயா குத்து குத்து. உக்கிரவீர பத்திராயா கட்டு கட்டு. இரண வீரபத்திராயா முறிமுறி. உத்தண்ட வீரபத்திராயா கொல்லு கொல்லு. சங்கிலி வீரபத்திராயா ஓடி ஓடி வா வா. இரணங்ங வீரபத்திராயா எரிஎரி. சர்வ தேவதைகளையும் உச்சாடு உச்சாடு. பிடிபிடி கட்டுகட்டு. அக்கினியில் போட்டு அனலைக் கொளுத்து. என்மேல் எதிர்த்த சத்ராதிகளை இடுப்பை முறி. உதிரத்தைக்குடி. உங்களைப் பகைத்தவன் அங்கத்தை வாளினால் அறுஅறு. சாடுசாடு சண்டைப்பிற சண்டவீரபத்திராயா. ஆதியாணை வாவா. அப்பா வாவா சுப்பையன் னாணை வாவா. உன் தமையன் கணபதி காத்து நிற்கிறார் வாவா. ஏறு ஏறு பேசுபேசு. வீசிவீசி. எழும்பு எழும்பு. இத்தடையற முறிய வேதவாகா.

சுபம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

# மாரியம்மன் காத்தவசுவாமி கஞமரப்பாடல்

திருச்சிற்றம்பலம்

**காப்பு**

**ஓரானைக் கன்றே உமையாள் திருமகனே**
**காரானை மாமுகற் கற்பகமே - சீராரும்**
**கார்த்தவனார் தன் கதையைக் கருணைகொடு பாடுதற்கு**
**வார்த்தையில் நில் மாமுகனே நின்தாழ் காப்பு**

**தரு**

**நன்ன நன்னே நானே நன்னா நன்ன நானே நன்னா நன்ன**
**நானானே நானே நன்னா நன்ன நானே நன்னா.**

**பாடல்**

1. தொட்டியனே துரைமகனே காத்தான் துரைமகனே - உந்தன்
சூட்சு மத்தை யாரறிவார் மகனே யாரறிவார்
எங்கயடா கண்டு வந்தாய் மகனே கண்டு வந்தாய். அந்த
ஏளரையான் மாதுபெண்ணை பொடியாமாதுபெண்ணை
- நன்ன

2. பாசுபடாக் கெங்கையிலே தாயே கெங்கையிலே - அந்தப்
பவளநீர் ஓடையிலே மாதாவே ஓடையிலே
கோதுபடா மஞ்சல் கொண்டு தாயே மஞ்சல் கொண்டு - அவள்
குளிக்கையிலே கண்டு வந்தேன் மாதாவே கண்டு வந்தேன்
- நன்ன

3. கண்டுவந்த மாலை பெண்ணைக் காத்தான் மாலை பெண்ணை - நீயும்
கொண்டு வரலாகாதடா மகனே ஆகாதடா
கெண்டநல்ல பெருத்தவளிடா மகனே பெருத்தவளிடா - நம்ம
கிழவளிக்கும் ஆகாதடா புலையா ஆகாதடா.
- நன்ன

4. அம்மா நான் பார்த்து வந்த நாள்முதலாய் தாயே நாள் முதலாய் - எனக்கு
படுத்துறங்கக் கூடுதில்லை தாயே கூடுதில்லை
அம்மா நான் கண்டு வந்த நாள் முதலாய் தாயே நாள் முதலாய் - எனக்கு
கண்ணுறக்கம் இல்லையம்மா மாதாவே இல்லையம்மா.
- நன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மகனே மாலை தன்னை மணந்து விட்டால் பொடியா மணந்துவிட்டால் - உனக்கு
மாபாவம் வந்துவிடும் மகனே வந்துவிடும்
மகனே மாலை என்ற சொல் லதனைப் பொடியா சொல்லதனை - நீயும்
மறந்திடடா என்மகனே காத்தான் என்மகனே.

- நன்ன

6. அம்மா என்ன மொழி நீ சொன்னாலும் தாயே சொன்னாலும் - எனக்கு
ஏற்குதில்லை என்மனசு மாதாவே என்மனது
அம்மா கண்ணழகுப் பெண்மொழியாள் தாயே பெண்மொழியாள் அந்தக்
கட்டழகி வேணுமம்மா தாயே வேணுமம்மா.

- நன்ன

7. மகனே மாமன் நல்ல மகளிருக்குக் காத்தான் மகளிருக்கு - உனக்கு
மறுதாரம் வேணாமடா புலையா வேணாமடா
மகனே தாய்மாமன் மகளிருக்கு மகனே மகளிருக்கு அந்தத்
தறுதலையாள் வேணாமடா காத்தான் வேணாமடா

- நன்ன

8. அம்மா நாவல் நல்ல பழத்திலையும் தாயே பழத்திலையும். அவள்
நல்லதொரு வான் கறுப்பி மாதாவே வான் கறுப்பி
அம்மா காகம் நல்ல கறுப்பிலையும் தாயே கறுப்பிலையும் - கன்னி
கடும் கறுப்பி என் மாலையம்மா மாதாவே மாலையம்மா

- நன்ன

9. மகனே கடிநாயும் சங்கிலியும் காத்தான் சங்கிலியும் - அவள்
கட்டிருக்காள் வாசலிலே புலையாவாசலிலே
மகனே காட்டானைக் காவலடா பொடியா காவலடா - அந்தக்
கட்டழகி வாசலிலே மகனே வாசலிலே

- நன்ன

10. அம்மா காட்டானைக் காவலென்றால் தாயே காவலென்றால் - நானும்
கட்டெறும்பு வடிவெடுப்பேன் மாதாவே வடிவெடுப்பேன்
அம்மா மோட்டாலே தாளிறங்கி தாயே தாளிறங்கி - நான்
மொய்த்திடுவோன் சீலையிலே அவள் சீலையிலே

- நன்ன

11. மகனே சிற்றானைக் காவலடா காத்தான் காவலடா - அந்த
சிற்றிடையாள் வாசலிலே புலையா வாசலிலே
மகனே மாற்றாரை வெற்றிகொள்ளும் புலையா வெற்றிகொள்ளும் - பெரும்
மறவரங்கே காவலடா மகனே காவலடா

- நன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அம்மா சிற்றானைக் காவலென்றால் தாயே காவலென்றால் - நானும்
சிற்றெரும்பு வடிவெடுப்பேன் மாதாவே வடிவேடுப்பேன்
அம்மா சிற்றெறும்பு வடிவெடுத்து தாயே வடிவெடுத்து - அவள்
சிற்றிடையில் போய் இருப்பேன் மாதா போயிருப்பேன்.

- நன்ன

13. மகனே என்னை விட பத்தினியோ அவள் பத்தினியோ - அவளின்
எண்ணமதை விட்டிடடா காத்தான் விட்டிடடா
மகனே அன்னையைப் போல் பெண்ணே என்று பொடி பெண்ணே என்று - நீயும்
அவளை தாரமென்று எண்ணாதடா புலையா எண்ணாதடா -

நன்ன

14. அம்மா பாயினிலே படுத்தாலும் தாயே படுத்தாலும் - நானும்
பாம் பாகச் சுளறு றண்டி மாதாவே சுளறுறண்டி
அம்மா நான் போகவிடை தாருமம்மா தாயே தாருமம்மா - அந்த
பொற்கொடியாள் கன்னியிடம் மாதாவே கன்னியிடம்

- நன்ன

15. மகனே கன்னி என்ற சொல் வசனம் புலையா சொல்வசனம் காத்தான்
கடுகனவே மறந்திடடா மகனே மறந்திடடா
மகனை சின்ன மாமன் மகளிருக்கு புலையா மகளிருக்கு - உனக்கு
சிறப்பாக கட்டித்தாறேன் மகனே கட்டித்தாறேன்.

- நன்ன

16. அம்மா சின்ன மாமன் மகள் தன்னையுமே மகள்தன்னையுமே நானும்
தினையளவு நினையேனம்மா மாதாவே நினையேனம்மா
அம்மா கோல விழி கன்னியம்மா தாயே மாலையம்மா - அந்தக்
கோதையரை நான் மறவேன் தாயே நான் மறவேன்

- நன்ன

17. மகனே கன்னி அவள் பிறக்கையிலே புலையா பிறக்கையிலே - அந்தக்
களுமரமும் பிறந்ததடா மகனே பிறந்ததடா
மகனை களு வதனிலிருக்குணுமா காத்தான் இருக்கணுமா - நீயும்
கட்டுண்டு சாகணுமா மகனே சாகணுமா

- நன்ன

18. அம்மா நான் வாழ்ந்தாலும் அந்த மாலையுடன் தாயே மாலையுடன் - பின்
மடித்தாலும் அந்தக் களுமரம்தான் மாதா களுமரம்தான்
அம்மா மாரி மகன் பிள்ளை என்று தாயே பிள்ளை என்று - இந்த
மானிலங்கள் போற்றவேணும் மாதாவே போற்றிடுமே.

- நன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. மகனே காமாட்சி பிள்ளை என்று காத்தான்பிள்ளை என்று - உன்னைக்
கண்டவர்கள் ஏசணுமா புலையா ஏசணுமா
மகனே தூண்டினில் இருக்கணுமா காத்தான் இருக்கணுமா - நீயும்
துடிதுடித்துச் சாகணுமா மகனே சாகணுமா

- நன்ன

20. அம்மா தூண்டில் வந்தால் பாரமில்லை தாயே பாரமில்லலை - அந்தத்
தோகைவந்தால் போதுமம்மா மாதாவே போதுமம்மா
அம்மா வாதனையும் சோதனையும் தாயே சோதனையும் எது
வந்தாலும் நான் ஏற்றிடுவேன் மாதாவே நான்ஏற்றிடுவேன்

- நன்ன

21. மகனே வேணாமடா காத்தான் வேணாமடா மகனே வேணாமடா அந்த
விறும குலப்பெண்ணுனக்குப் புலையா பெண்ணுனக்கு
மகனே தொட்டாலும் தோசமடா காத்தான் தோசமடா - அந்த
தோகையிட மேனியிலே மகனே மேனியிலே

- நன்ன

22. அம்மா தடுத்தாலும் நான் தரியேன் மாதாவே நான் தரியேன் அந்த
தையலிடம் சென்றிடுவேன் தாயே நான் சென்றிடுவேன்
அம்மா எடுத்து எதை நீ கூறினாலும் தாயே கூறினாலும் மனது
ஏற்குதில்லை எனைப் பெற்றவளே மாதாவே பெற்றவளே

- நன்ன

23. மகனே மாலைதனில் ஓர் மணியும் காத்தான் ஓர் மணியும் அந்த
மங்கை மயிர் ஓரிளையும் சீலை ஓர் கரையும்
மகனே கொண்டு வந்து கரம் தந்தவுடன் நீயும் தந்தவுடன் அந்த
குலமகளை உன்னோடு சேர்த்துவைப்பேன் மகனே சேத்துவைப்பேன்.

- நன்ன

24. மாலையிடம் செல்வதற்கு சாமி செல்வதற்கு - காத்தான்
மாறு வேசம் தானெடுத்தார் சாமி தானெடுத்தார்
பஞ்சவர்ணக்கிளிபோலே சாமிகிளிபோலே - காத்தான்
பண்பாக வடிவு கொண்டார் சாமி வடிவுகொண்டார்.

- நன்ன

25. தாயாரைத் தான் வணங்கிச் சாமிதான் வணங்கி - அவள்
தாழ்ழியையும் பூண்டு கொண்டார் சாமி பூண்டு கொண்டார்
மாதாவின் தன்னிடத்தில் சாமி தன்னிடத்தில் - காத்தான்
வரங்கள் பல பெற்று வந்தார் சாமி பெற்றுவந்தார்.

- நன்ன

சுபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் காத்தவராயன் வசனநடைப் பாடல்கள்

### காத்தவராயன் தாயாரை வணங்குதல்

மாரி : **என்ன மகனே என்றைக்கு மில்லாதுவாறு இவ்வளவு சுணக்கம்.**

காத்தான்: **அம்மா நான் தோழர்களோடு (விளையாடும் பொழுது)**
மாலை ஒன்று கண்டு வந்தேன். மாதாவே கண்டு வந்தேன்
அம்மா நான் கண்டு வந்த நாள் முதலாய் தாயாரே நாள் முதலாய்
எனக்கு கண்ணுறக்கமில்லையடி தாயாரே இல்லையடி.

மாரி: **என்னடா மகனே. அந்த மாலை தங்க மாலையா முத்து மாலையா கொண்டு வந்ததைக் காட்டு மகனே பார்ப்பம்.**

காத்தான்: அம்மா அது அந்த இந்த மாலை இல்லை. மாதாவே மாலை இல்லை.
அது ஆரியப்பூ மாலையல்லோ தாயாரே மாலையல்லோ.

மாரி: **(குடி கெடுத்த காரியமல்லவடா மகனே செய்தாய் அந்தமாலை பெண்ணை)**
எங்கேயடா மகனே கண்டு வந்தாய் மகனே கண்டு வந்தாய்
அந்த ஆரியப்பூ மாலை பெண்ணை மகனே மாலை பெண்ணை.

காத்தான்: **(அம்மா நான் விளையாடி வரும்பொழுது அந்த ஆரியப்பூ மாலையானவள்)**
மாசிபடாக் கெங்கையிலே மாதாவே கெங்கையிலே
அவள் கோதுபடா மஞ்சள் கொண்டு தாயாரே மஞ்சள் கொண்டு
அவள் குளிக்கையிலே கண்டேனம்மா மாதாவே கண்டேனம்மா.

மாரி: **(எனது தமையனும் உனது மாமனுமாகிய அந்த மகா விஷ்ணுமூர்த்தி என்ன சொல்ல போகிறார் அவர் மகள் கறுப்பழகி இருக்கிறாள்)**
மகனே சொந்த மாமன் மகள் இருக்க மகனே மகள் இருக்க
உனக்கு தூரவழி வேணாமடா மகனே வேணாமடா.
அழகிய மாமான் மகள் இருக்க மகனே மகளிருக்க
உனக்கு அயலவளும் வேணாமடா மகனே வேணாமடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காத்தான்: அம்மா அந்த கறுப்பழகியை பற்றியும் அவள் அழகைப் பற்றியும் உனக்குத் தெரியாது தாயே.**

அம்மா அவள் நாவற் பழத்திலையும் மாதாவே பழத்திலையும்
நச்ச நல்ல வான் கறுப்பி தாயாரே வான் கறுப்பி,
யீச்சம் பழத்திலையும் தாயாரே பழத்திலையும்
அவள் இருண்ட நல்ல செங்கறுப்பி தாயாரே செங்கறுப்பி.

**(அம்மா அங்கு இடையர் தொழில்தான் அவள் தொழில். ஆனபடியால்**

அம்மா மாலைபடும் நேரத்திலே மாதாவே நேரத்திலே
என்னை மாடடைக்கப் போகச் சொல்வாள். தாயாரே போகச்சொல்வாள்
அம்மா அந்திபடும் நேரத்திலே மாதாவே நேரத்திலே
என்னை ஆடடைக்கப்போகச் சொல்வாள் தாயாரே போகச் சொல்வாள்.
சட்டியிலே தயிரெடுத்து மாதாவே தயிரெடுப்பாள்.
சாய்ந்து நிண்டு மத்தடிப்பாள் தாயாரே மத்தடிப்பாள்.

**மாரி: எனது மருமகளைப் பற்றி இவ்வளவு கேவலமாக பேசுகிறாய். அவள் அழகைப் பார்க்கிலும் அந்த ஆரியப்பூமாலையானவள் பெரிய அழகுள்ளவளா.**

மகனே கெண்டை பெருத்தவள்டா காத்தமுத்து பெருத்தவள்டா
அவள் கிழ வளிக்கும் ஆகாதடா மகனே ஆகாதடா
மகனே கொண்டை பெருத்தவள்றா காத்தான் பெருத்தவள்றா
அவள் குடி வளிக்கும் ஆகாதடா மகனே ஆகாதடா.

**காத்தான்: தாயே நீ எப்படி சொன்னாலும் அந்த ஆரியப்பூமாலையும் அங்கம் ஒவ்வொன்றும் எனக்குத் தங்கமாகத் தெரியுது தாயே.**

அவளை கண்டு வந்த நாள் முதலாய் தாயே நாள் முதலாய்
எனக்கு கண்ணுறக்கம் தோணுதில்லையே தாயாரே தோணுதில்லே
அம்மா நான் படுத்தாலும் பாய்தனிலே மாதாவே பாய்தனிலே
ஒரு பம்பரம் போல் சுழற்றுதடி தாயாரே சுழற்றுதடி.
அம்மா நான் உண்டாலும் சோறுகறி தாயாரே சோறுகறி
என் உடலம்பிலையும் ஒட்டுதில்லை மாதாவே ஒட்டுதில்லை.
அம்மா நான் திண்டாலும் இலை பிளகு தாயே இலை பிளகு
என் திருவாயும் சிவக்குதில்லை காமாட்சி சிவக்குதில்லை.

**மாரி: அது சரிதான் மகனே நீ அந்த பெண்ணை விரும்புவதால் பல கஸ்டங்கள் வந்து சேரும் அப்படி இல்லை என்று நீ அவளை சிறை எடுக்க போவதென்றால் எத்தனையோ காவலை கடந்து போக வேண்டும் மகனே.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனே நாகம் குடை பிடிக்கும் காத்தலிங்கம் குடை பிடிக்கும்
அவளுக்கு நல்ல பாம்பு ஓசையிடும் என்மகனே ஓசையிடும்.
**(மகனே இப்படி உன் உயிருக்கு ஆபத்து வரக்கூடிய விதமாய் இருக்கிறது. ஆகையால் போக வேண்டாம் மகனே.)**

காத்தான்: அம்மா நான் கட்டெறும்பு வடிவெடுத்து தாயே வடிவெடுத்து
அவளிட கட்டிலிலே போயிருப்பேன். தாயே போயிருப்பேன்.
அம்மா நான் சித்தெறும்பு வடிவெடுத்து தாயாரே வடிவெடுத்து
அவளிட சீலையிலே போயிருப்பேன் காமாட்சி போயிருப்பேன்.
அம்மா அந்த மாலை தனை சிறைஎடுத்து பத்தினியே சிறை எடுத்து
இங்கே கொண்டுவரத் தாடி வரம் மாதாவே தாடிவரும்

**மகனே உலக மாதாவாகிய எனது சொல்லை மீறி பேசுகிறாய் இதற்குத்தானா உன்னை பெற்று வளர்த்தேன். இப்படி செய்வாய் என்று தெரிந்திருந்தால்.**

உன்னை மாப்புதைதத்த மூலையிலே காத்தானே மூலையிலே உன்னை மடுத்தோண்டி புதைத்தேனில்லை பொடியா புதைத்தேனில்லை.

மகனே உன்னை கொடிப் புதைத்த மூலையிலே காத்தான் மூலையிலே உன்னை குழிதோண்டிப் புதைத்தேனில்லை காத்தலிங்கம் புதைத்தேனில்ல.

**மகனே நான் என்ன சொன்னாலும் நீ கேட்கிறபடியாகக் காணப்படவில்லை. எனவே நடப்பது நடந்தே தீரும் உன் இஸ்டம் போல் நட மகனே.**

**(இத்துடன் இவ்வசன நடைப் பாடல்கள் முடிவுபெறுகின்றன.)**

காத்தவசுவாமி ம. கொடுக்கை

ஓம் சரவண பவாயா ஓம் சயனொளி பவாயா
ஓம் திரிபுர பவாயா ஓம் திகளொளி பவாயா
ஓம் பரிபுர பவாயா ஓம் பவனொளி பவாயா
ஆரியப்பூமாலையை அழகுமணமுண்டவா
உன்தாய் வல்ல காமாட்சி வந்தே அழைக்கிறாள்
ஓம் பாலசுப்ரமணியா இந்தா வா வாங்கப்பா வாங்கு.

சிவமுத்து மணிமாலை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெஞ்சல்

அஞ்சி நிதம் வாழுமன்பர்,
அடியார், துயர் துடைத்து,
வெஞ்சமரும் ஓய்ந்து, நாளும்
விடிவினை நாம் கண்டிடவே,
கெஞ்சியுனைக் கேட்கின்றேன்.
கஞ்சமலர் சிவமுத்து மாரியம்மா!
பஞ்சம் பிணி நோய்யகற்றியிப்
பார் தளைக்கப் பெருவாழ்வு தாராயோ!

தஞ்சமென உனை நம்பும் மெய்யடியார்
தயகுற்றம், குறை பொறுத்து,
வஞ்சமிலா அன்பர் உனை வணங்கி
வடிக்கும் கண்ணீர் தூறல்,
பஞ்செனவே பறந்தோடிட இன்பம்
மிஞ்சிவரம் தாராயோ!
நெஞ்சம் கனக்கத் தாயே நின்பதம்
சரணடைந்தோம் நாம்.

- கல்முனை ப்பிரியா

**நால்வர்கோட்டம் (அன்பு ஆஸ்ரமம்)**
**கல்முனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நா. விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

ஆக்க நூல்கள்:

| | |
|---|---|
| ✧ பராசக்தி பக்தி ரசப் பாமாலை | 60.00 |
| ✧ சரவண பவ சண்முகமாலை | 60.00 |
| ✧ சித்தி விநாயகர் சிறு பாமாலை | 50.00 |
| ✧ புயற்காவியம் | 60.00 |
| ✧ திருமுருகன் திருப்பாமாலை | 80.00 |
| ✧ கலிகால அம்மானை கலிகாலச் சிந்து | 60.00 |
| ✧ உகந்தைமலைக் குழந்தை முருகன் பாமாலை | 50.00 |
| ✧ திருமுருகன் திருப்பாடற் திரட்டு | 200.00 |

தொகுப்பு நூல்கள்:

| | |
|---|---|
| ✧ முத்தான முருகன் தோத்திரப் பாடல்கள் | 120.00 |
| ✧ வைகுந்த மோட்சமாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 70.00 |
| ✧ கழுகு மலைப்பத்து | 60.00 |
| ✧ சிவசெந்தி மாலை | 60.00 |
| ✧ குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் (ஆக்க.தொகுப்பும்) | 200.00 |
| ✧ ஆதிமூல கெருடப்பத்து | 60.00 |
| ✧ சிவமுத்து மணி மாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 100.00 |
| ✧ சித்தர் ஞான வாலைக் கும்மி | 100.00 |

**மேற்படி நூல்கள் தேவையானோர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெறமுடியும்.**

**செயலாளர்:**
**நால்வர் கோட்டம் (அன்பு ஆஸ்ரமம்)**
**இல. 62/1 யாட் வீதி,**
**கல்முனை.**

கோல்டன் அச்சகம் கல்முனை. 067-2223039

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org